1981 ஜனவரி 27]

பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம்.

*வினா எண். 50—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் பாலாற்றின் குறுக்கே அம்மலூர் எக்லாஸ்புரத்திற்கு தரைப்பாலம் அமைக்கும் திட்டம் இருக்கிறதா?

(ஆ) அவை எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? இந்தத் திட்டம் எவ்வளவு காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே 16·50 லட்ச ரூபாய் இதற்கு ஒப்பந்த முடிவு அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் ஒப்பந்தம் ஏற்பட்டு, வேலை தொடங்கப்படும். தொடங்கிய பிறகு வேலை முடியும்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பாலங்கள் கட்டப்படுகின்றபோது, வீராணம் திட்டம் கைவிடப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றியது. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள், இது கான்ட்ராக்டுக்கு விட்டு, கட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்று பதிலளித்து விட்டார், அடுத்த கேள்வி எண்.51.

கோடைக்கானல் பகுதிகளில் வாழைப்பயிர்.

* வினா எண். 51—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ணைக்காடு, தாண்டிக்குடி, கோடைக்கானல், அய்யன்பாளையம், பட்டிவீரன்பட்டி போன்ற பகுதிகளில் வாழைப் பயிருக்கு முடிக்கொத்து நோய் வந்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

[1981] ஜனவரி 27

(ஆ) ஆம் எனில், அந்த விவசாயிகளைப் பாதுகாக்க அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்னென்ன ?

(இ) மீண்டும் இந்நோய் வராமல் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; (அ) ஆம்.

(ஆ) முடிக்கொத்து நோய் தாக்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் வாழைக்குப் பதில் மாற்றுப்பயிர் பயிரிட பரிந்துரை செய்யப்படுகிறது. மாற்றுப் பயிர்த்திட்டத்தை ஊக்குவிக்க விதை, உரம், பூச்சிக்கொல்லிகள் போன்ற இடு பொருள்கள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மலைவாழைப்பயிர், தொடர்ந்து சாகுபடி செய்ய இருப்போருக்கு நோய் தாக்காத உயரிய மலைவாழைக் கன்றுகள் உற்பத்தி செய்து வழங்க வாழைக்கன்றுகள் தயாரித்து விநியோகிக்க ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. இது தொடர்பாக பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதோடு கருத்தரங்குகளின் மூலமாகவும், விவசாயிகளிடம் நேரடித் தொடர்பு மூலமாகவும் பயிற்சி அளித்து நோயினால் தாக்கப்பட்ட வாழைகளை அப்புறப் படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) இம்முடிக்கொத்து நோய் அசுவினிப்பூச்சிகளால் பரப் பப்படும் வைரஸ் நோய். இந்நோயை முற்றிலும் கட்டுப் படுத்துவது இயலாத காரியம். ஆனால் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தினரால் தடியன்குடிசை என்னும் இடத்தில் நடத்தப்பட்டு வரும் ஆராய்ச்சிப் பண்ணையில் இது வரை எந்தவித இறுதி முடிவும் வெளியிடப்படவில்லை. நோய் முழுவதும் வராமல் தடுத்து பரிபூரண தடுப்பு முறை காண்பதற்கு இன்னும் சில காலம் ஆகலாம்.

திரு. ராஜகுமார் விஜயரகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுப் பயிர் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த மாற்றுப் பயிர்கள் செய்வதாக அரசாங்கம் நினைத்துக்கொண் டிருக்கிறது ? முக்கியமாக, கொக்கோ, மிளகு இவைகளை, மாற்றுப் பயிர்களாகப் பயிரிட்டால், இந்த வாழையில் ஏற்பட்ட நஷ்டஈட்டை ஈடுசெய்யும் என்று நினைக்கிறேன். அதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் மிளகு, அன்னாசி, ஜாதிக்காய் போன்ற பயிர்கள் வாழைகள் அழிந்த இடங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 ஜனவரி 27]

: திரு. என். வரதராஜன் : தமிழகத்தில் புகழ்பெற்ற சிறுமலை வாழைப்பழங்கள் எதிர்காலத்தில் இல்லாமல் போய்விடுமோ என்ற ஆபத்து இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல் லும்போது ஆராய்ச்சி இன்னும் கொஞ்சகாலம் தொடரும் என்று சொன்னார்கள். அதனுடைய நிலை என்ன ? இந்த வாழைப் பயிருக்குப் பதிலாக மாற்றுப் பயிர் வைப்பதைவிட பிரசித்தி பெற்ற இந்த வாழையை மீண்டும் உயிர்ப்பிக்க என்ன முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வேளாண்மைப் பல்கலைக் கழகம் அந்த ஆராய்ச்சியை தீவிரமாக நடத்திக்கொண்டிருக் கிறது. முடிவு வெளியிடப்பட்டவுடன் நிச்சயமாக மலை வாழைக்கன்றுகள் காப்பாற்றப்படும் அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தற்போது நோய் தாக்காத மலைவாழைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படு கின்றன.

திரு. ப. நெடுமாறன் : ஏறத்தாழ ஐந்தாண்டுகளுக்கு மேலாக ஒருவகை மலை வாழையே முடிக்கொத்து நோயினால் முற்றிலும் அழிந்து விட்டிருக்கிறது. எவ்வளவோ மருந்துகளைப் போட்டும் பயனளிக்கவில்லை. இன்னும் ஆராய்ச்சி நிலையில் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. மேலும் மற்ற இடங்களிலும் வாழை முற்றிலும் அழிந்துவிடக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே, வெளிநாட்டு நிபுணர்களை வரவழைத்தாவது நோய்க்குரிய கார ணத்தை ஆராய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இப்போது அந்த நோய் குறிப்பாக கொடைக்கானல் வட்டாரத்தில் மட்டுந்தான் இருக்கிற தென்று தகவல் இருக்கிறது. நம்முடைய ஆராய்ச்சி நிபுணர்கள் மிக்க திறமை மிக்கவர்கள். ஆகவே, நிச்சயமாக அவர்கள் அதற்கு ஒரு முடிவு காண்பார்கள்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : முடிக்கொத்து நோய் கொடைக் கானல் வட்டாரத்தில் ஆரம்பித்து வெகுவாகப் பரவி வருகிறது. தரைப் பகுதியில் அந்த நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்கெனவே பதில் சொல்லப்பட்டு விட்டது.